**பாடம் 7**

# தேவனிடம் நேர்மை



**மனன வசனம்**

**நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள். லூக்கா 8:15.**

**ஆராய்ச்சிக்கு**

**லூக்கா 16:10; லேவி 27:30; ஆதியாகமம் 22:1–12; எபிரெயர் 12:2; லூக்கா 11:42; எபிரெயர் 7:2–10; நெகேமியா 13.**

பெப்ரவரி 10 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

நேர்மையுள்ள இருதயம் என்றால் என்ன? அதை எவ்வாறு அடையாளம் காணலாம்? நேர்மை என்பது தெளிவாக விளக்கமுடியாதது என்றும், இடத்திற்கு இடம் மாறுபடுகிற ஒன்று என்றும் இன்றைய கலாச்சாரத் தினர் கருதுகிறார்கள்; பெரும்பாலானவர்கள் தாங்கள் நேர்மையின்றி நடந்துகொண்டாலும், அது பெரிய அளவிலான வரம்புமீறலாக இல்லாத பட்சத்தில் தவறில்லையெனக் கருதுகிறார்கள். குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் அத்தகைய நடத்தைகளை நியாயப் படுத்தவும் தயங்குவதில்லை.

உண்மையும் நேர்மையும் சேர்ந்தே செல்லுபவை. ஆனாலும், நேர்மை என்பது பிறப்பிலேயே வருவது அல்ல; இது வாழ்க்கையில் கற்றுக்கொள்ளும் ஓர் ஒழுக்க நெறியாகும்; ஓர் உக்கிராணக்காரரின் ஒழுக்கங்களின் மைய குணமாகும்.

நேர்மையான நடத்தையானது பல நன்மைகளைக் கொண்டுவரக் கூடியது. உதாரணமாக, மாட்டிக்கொள் வோமோ என்கிற கவலை இல்லை; மூடிமறைக்க வேண்டியிருக்குமோ என்கிற பயம் இல்லை. இது போன்ற பல காரணங்களுக்காக, நேர்மை என்பது மிக மதிப்புவாய்ந்த ஒரு குணமாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, கடினமான சூழ்நிலைகளில் நேர்மை யிலிருந்து பிறழ நாம் தூண்டப்படும்போதும், நேர்மை யுடன் நடப்பது இதன் சிறப்பை விளங்கச்செய்கிறது.

நேர்மை என்கிற ஆவிக்குரிய கருத்தை தசமபாகம் கொடுத்தல் என்கிற நடைமுறையின்மூலம் இந்த வாரம் ஆராயப்போகிறோம். உக்கிராணத்துவத்தில் தசம பாகம் எவ்வாறு ஒரு மைய அம்சமாக இருக்கிறது என் பதைக் கண்டுகொள்ளலாம்.

2017, பெப்ரவரி 17 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## நேர்மைக்கு ஓர் எளிய உதாரணம்

நேர்மையற்ற நடத்தை யாருக்குமே பிடிப்பதில்லை. குறிப்பாக, மற்றவர்கள் அவ்வாறு நடக்கும்போது கொஞ்சமும் பிடிப்பதில்லை. ஆனால், நாம் அப்படி நடக்கிறோமோ என்பதைக் கவனிக்கத் தவறிவிடுவோம். அப்படியே நேர்மையின்றி நடந்துவிட்டாலும், அதற்கு பல காரணங்களைச் சொல்லி, நியாயப்படுத்துவோம்; 'இதனால் என்னவாகப்போகிறது? அற்ப விஷயம், கண்டுகொள்ளாமல் விடு' என்று சொல்லி, அது ஒரு பெரிய விஷயமே இல்லாததுபோலக் காட்டுவோம். இப்படி பல சமயங்களில் நம்மை நாமே முட்டாள்களாக்குகிறோம்; ஆனால் தேவனை நாம் முட்டாளாக்கவே முடியாது.

'எல்லா நிலை மக்களிடமும் நேர்மையின்மை காணப்படுகிறது; சத்தியத்தை விசுவாசிப்பதாகச் சொல்லுகிறவர்கள் வெதுவெதுப்பாக இருப்பதற்கு இதுவே காரணமாக இருக்கிறது. அவர்கள் கிறிஸ்துவோடு தொடர்பில்லாதவர்களாக, தங்கள் ஆத்துமாக்களையே வஞ்சிக்கிறார்கள்.' – *EGW, 4T, p 310.*

***லூக்கா 16:10இல் இயேசு வலியுறுத்துகிற நியதி என்ன? கொஞ்சத்திலே உண்மையாக இருப்பது ஏன் மிகமுக்கியமான ஒன்றாக இருக்கிறது?***

---

---

நம்முடைய நேர்மைபற்றி கடவுளுக்குத் தெரியும்; அதுவும் நமக்குச் சொந்தமானவற்றில் நாம் நேர்மை தவறுவது எளிது. ஆனாலும், நாம் பெற்றுள்ள ஆஸ்திகளில் நாம் நேர்மையின்றி, சுயநலத்தோடும் நடக்காமல் இருக்க ஆற்றல்மிக்க மாற்று மருந்து ஒன்றை அவர் கொடுத்திருக்கிறார்.

***அதுபற்றி லேவி 27:30; மல்கியா 3:8 ஆகிய வசனங்கள் என்ன கூறுகின்றன? அவ்வசனங்களுக்குச் செவிகொடுப்பதால் எவ்வாறு நாம் நேர்மையாக வாழமுடியும்?***

---

---

'நன்றிபெருக்கோடும் பெருந்தன்மையோடும் நடக்க அழைப்பு விடுக்கப்படுவதில்லை. நேர்மையான வாழ்க்கைக்கு எளிய உதாரணங்களாக இக்குணங்கள் உள்ளன. தசமபாகம் கர்த்தருடையது; தமக்குச் சொந்தமானதிலிருந்து தமக்கே தரும்படி அவர் கேட்கிறார். வியாபாரத்தில் நேர்மை ஓர் இன்றியமையாத அம்சமாக இருக்குமானால், தேவனுக்கு நாம் செய்யவேண்டிய கடமையில் நேர்மை அவசியம் அல்லவா? அக்கடமைதான் மற்ற அனைத்திற்கும் அடிப்படையானது.' – *EGW, Education, p 138,139.*

நீங்கள் பெற்றிருக்கும் அனைத்துக்கும் சொந்தக்காரரான தேவனை அங்கீகரிக்க தசமபாகம் எவ்வாறு உதவுகிறது? உங்களுடைய ஆஸ்திகளுக்கெல்லாம் சொந்தக்காரரை மறவாமல் இருப்பது ஏன் முக்கியமானது?

**ஆபிரகாமின் விசுவாசம் நிஜமானதா? ஆதி 22:1-12.**

விசுவாச வாழ்க்கை என்பது ஒருமுறை நிகழ்வால் தீர்மானிக்கப்படுவது அல்ல. வாழ்க்கையில் ஒரே ஒரு முறை விசுவாசத்தை வெளிப்படுத்திவிடுவதால், நான் கிறிஸ்துவின் இரத்தத்தாலும் கிருபையாலும் மூடப்பட்டவர்கள் என்று யாரும் சொல்லிவிடமுடியாது. உண்மையும் மெய்ப்பற்றுமிக்க கிறிஸ்தவர்கள் என்றும் சொல்லிவிடமுடியாது.

உதாரணமாக, மோரியா மலைமேல் ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குமூலம் வெளிப்படுத்திய விசுவாசமானது, ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு இன்றும் கிறிஸ்தவர்களைத் திகைக்கச்செய்து வருகிறது. ஆதி 22. அத்தருணத்தில் ஏதோ மாயாஜாலத்தால் ஆபிரகாமுக்கு அவ்விசுவாசம் வந்துவிடவில்லை. அதற்கு முன்னரே அவர் உண்மைவிசுவாசமுள்ளவராக வாழ்ந்ததால்தான் அது சாத்திய மானது. அதற்குமுன் அவர் உண்மையற்றவராக இருந்திருந்தால், அந்தச் சோதனை யில் நிச்சயம் அவர் ஜெயித்திருக்கமாட்டார். அந்நிகழ்வுக்குப் பிறகும் அவர் அதே விசுவாசத்தோடுதான் நிச்சயம் வாழ்ந்திருப்பார்.

உக்கிராணத்துவ வாழ்க்கையிலும் விசுவாசம் என்பது ஒருமுறை நிகழ்வு அல்ல. ஒருவர் எவ்வளவு காலம் விசுவாசத்தின்படி வாழ்கிறார் என்பதை பொறுத்து, அது ஆழமாக வேர்விட்டு பெலப்பட லாம்; அல்லது மேலோட்டமாகச் சென்று, காய்ந்துபோகலாம்.

**நம் விசுவாசத்தின் ஆதாரம் யார்? எவ்வாறு அந்த விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளலாம்?**

'தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண் ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற''விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயே சுவை நோக்கி' பார்ப்பதுதான் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களுக்குக் கிடைத் துள்ள ஒரே உதவி. எபி 12:2,1. முடிக்கிறவர் என்கிற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்குமட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது; இதை 'பூரணப்படுத்துகிறவர்' என்றும் மொழிபெயர்க்கலாம். நம் விசுவாசத்தை முதிரச்செய்து, முழு நிறைவாக்குவதே இயேசுவின் நோக்கமாகும். எபி 6:1,2. எனவே, விசுவாச வாழ்க்கை என்பது ஓர் உயிருள்ள அனுபவம். அது வளரும், முதிர்ச்சியடையும், கனி தந்து பெருகும்.

உங்கள் விசுவாசம் வளர்வதையும், காலப்போக்கில் முதிர்ச்சியடைவதையும் கண்டிருக் கிறீர்களா? அல்லது, இன்னமும் அந்த அனுபவம் உண்டாகவில்லையா?

## விசுவாசம் அறிக்கை

விசுவாசம் என்பது ஒரு செயல்முறை என்றும், காலப்போக்கில் வளர்ந்து, முதிர்ச்சியடைகிற உயிருள்ள ஓர் அனுபவம் என்றும் நேற்று பார்த்தோம். தேவன் நம் விசுவாசத்தைப் பூரணமாக்கி, அதை ‘முடிப்பதற்கு’ தசமபாகம் கொடுத்தலையும் ஒரு வழியாக வைத்திருக்கிறார். சரியாகப் புரிந்திருப்பவர்கள், தசமபாகம் கொடுப்பதை கிரியைத்துவ விஷயமாகக் கருதமாட்டார்கள்; தசமபாகம் கொடுத்து பரலோகம் சென்றுவிடலாம் என்று முயலமாட்டார்கள். நம் விசுவாசம் உண்மையானது என்பதை வெளிப்படையாக, பிறர் காணும்விதத்தில், தனிப்பட்ட வாழ்க்கையில் வெளிப்படுத்தவதுதான் தசமபாகம் கொடுத்தலாகும்.

தேவனில் தங்களுக்கு விசுவாசமும் நம்பிக்கையும் இருப்பதாகவும், தாங்கள் இயேசுவை நம்புவதாகவும் யார் வேண்டுமானாலும் சொல்லலாம். தேவன் உண்டென்று ‘ பிசாசுகளும் விசுவாசிக்கின்றன.’ யாக் 2:19. ஆனால் வருமானத்தில் 10 சதவீதம் எடுத்து, தேவனிடம் திரும்பக்கொடுப்பதற்கு எத்தனை பேர் ஆயத்தமாக இருக்கிறார்கள்? இதுதான் விசுவாசத்தின் வெளிப்பாடு.

***தசமபாகம் கொடுப்பதை விட்டுவிடாமல் இருக்கவேண்டுமென இயேசு ஏன் சொல்கிறார்? லூக் 11:42. நியாயப்பிரமாணம் கற்பிக்கிற விசேஷித்த விஷயங்களில் எவ்வாறு தசமாகம் கொடுத்தலும் ஒன்றாக இருக்கிறது?***

---

தசமபாகம் கொடுக்கும்போது தேவனை நாம் சார்ந்திருப்பதையும், கிறிஸ்துவே நம் மீட்பர் என்று நம்புவதையும் வெளிப்படுத்துகிறோம். ‘ கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும்’ நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதையும், இன்னும் அநேக வாக்குறுதிகள் நம்மில் நிறைவேறியிருப்பதையும் நாம் வெளிப்படுத்துகிறோம்.

***தேவன் வாக்குத்தத்தத்தைக் கொடுத்தவுடன் யாக்கோபின் எதிர்வினை என்னவாக இருந்தது? ஆதி 28:14-22.***

---

‘சிக்கலற்ற, சமச்சீரான தசமபாக முறையானது தேவ திட்டத்தில் தனித்துவமானது. தேவனே இதைக் கொடுத்திருப்பதால், அனைவரும் விசுவாசமாகவும் தைரியமாகவும் இதைக் கடைப்பிடிக்கலாம். இது மிகவும் எளிமையான, பயன் மிக்க ஒன்று; இதைப் புரிந்துகொள்ளவும், செயல்படுத்தவும் ஆழமான ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. இரட்சிப்பின் ஒப்பற்ற பணியைச் செய்வதில் அனைவரும் இதன்மூலம் ஒரு பங்காற்றமுடியுமென உணரவேண்டும். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வாலிபரும் ஆண்டவருடைய பொக்கிஷக்காரராகலாம்; பணத்தேவைகளைச் சந்திக்கும் முகவராகலாம்.’ – *EGW, CS, p 73.*

---

தசமபாகம் கொடுப்பதால் கிடைக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எவ்விதங்களிலெல்லாம் உண்மையாகவே பெற்றிருக்கிறீர்கள்? தசமபாகம் கொடுப்பது எவ்வாறு உங்கள் விசுவாசம் வளருவதற்கு உதவியாக இருந்தது?

எல்லாமே தேவனுக்குச் சொந்தமானவையாக இருக்கும்போது, தேவனுக்கு தசமபாகம் கொடுப்பது என்றால் என்ன?

***தசமபாகம்குறித்த என்ன இரு முக்கியக் கருத்துகள் லேவி 27:30இல் உள்ளன?***

'தசமபாகம் தேவனுக்குரியதாக இருப்பதால் இது பரிசுத்தமானது. பொருத்தனையாலோ, பரிசுத்தப்படுத்துவதாலோ இது பரிசுத்தமாவதில்லை. இயல்பாகவே இது பரிசுத்தமானது; இது தேவனுக்குரியது. தேவனைத் தவிர வேறு யாரும் இதைப் பெறமுடியாது. தசமபாகம் ஒருபோதும் ஒருவருக்குச் சொந்தமானவற்றின் ஒரு பகுதியாக இருக்கமுடியாது. எனவே, இதை யாரும் தேவனுக்குப் பரிசுத்தப்படுத்த முடியாது.' - அஞ்சல் மனுவேல் ராட்ரிகஸ், *Stewardship Roots, p 52.*

தசமபாகத்தை நாம் ஒருபோதும் பரிசுத்தமாக்க இயலாது; ஆனால் அதைப் பரிசுத்தப்படுத்துகிற நிலையில் தேவன் இருக்கிறார். அவருக்கு அந்த உரிமை இருக்கிறது. உக்கிராணக்காரராகிய நாம் அவருக்குரியதை அவருக்கே திரும்பச் செலுத்துகிறோம். தசமபாகம் ஒரு குறிப்பிட்ட பணிக்காக தேவனிடம் அர்ப்பணிக்கப்படுகிறது. வேறு வேலைக்காக அதை வைத்துக்கொள்வது நேர்மையற்றது. பரிசுத்த தசமபாகத்தைக் கொடுப்பதை ஒருபோதும் மீறக்கூடாது.

***மெல்கிசேதேக்கு என்பவருக்கு ஆபிரகாம் தசமபாகம் கொடுத்ததுபற்றி எபி 7:2-10இல் பவுல் பேசுகிறார்; தசமபாகத்தினுடைய முக்கியத்துவத்தின் ஆழம்பற்றி இது வெளிப்படுத்துவது என்ன? உண்மையில் ஆபிரகாம் யாருக்குத் தசமபாகம் கொடுத்தார்?***

ஓய்வுநாளைப்போலவே தசமபாகமும் பரிசுத்தமானது. பரிசுத்தம் என்றால், 'பரிசுத்த பயன்பாட்டிற்காகப் பிரித்தெடுக்கப்படுதல்' ஆகும். ஓய்வுநாளும் தசமபாகமும் இவ்வாறுதான் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. ஏழாம் நாள் ஓய்வுநாளை பரிசுத்தமானதாகப் பிரித்தெடுக்கிறோம்; தசமபாகமும் பரிசுத்தமானதாக இருப்பதால், அதையும் தேவனுடைய பரிசுத்த உடைமையாகப் பிரித்தெடுக்கிறோம்.

"தேவன் ஏழாம் நாளைப் பரிசுத்தப்படுத்தினார். தொழுகைக்கென்று தேவன் தாமே பிரித்தெடுத்த அந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியானது, நம் சிருஷ்டிகர் முதலில் அதைப் பரிசுத்தப்படுத்தியதுபோல இன்றும் பரிசுத்தமானதாக இருக்கிறது.

'இதேபோல நம் வருமானத்தின் தசமபாகமும் 'ஆண்டவருக்குப் பரிசுத்தமானது.' புதிய ஏற்பாடானது ஓய்வுநாள் கட்டளையை மாற்றாததுபோலவே, தசமபாகக் கட்டளையையும் மாற்றவில்லை; இரண்டுமே இன்றும் வழக்கில் இருக்கின்றன; இரண்டுமே ஆழமான ஆவிக்குரிய அர்த்தத்தைப் பெற்றிருக்கின்றன. தமக்குச் சொந்தமானதென்று தேவன் ஒதுக்கிவைத்த காலப்பகுதியை உண்மையோடு ஏற்றுக்கொள்ள முயல்கிற நாம், தமக்குரியதென்று தேவன் சொந்தங்கொண்டாடுகிற தசமபாகத்தையும் அவருக்குக் கொடுக்கவேண்டாவா?" -*EGW, CS, p 66.*

உங்களுடைய தசமபாகமும் பரிசுத்தமானதே என்கிற உணர்வு உங்கள் மனதையும் இருதயத்தையும்விட்டு நீங்காமல் எவ்வாறு பார்த்துக்கொள்ளலாம்?

## எழுப்புதல், சீர்திருத்தம், தசமபாகம்

யூதா ராஜ்ய வரலாற்றில், எசேக்கியாவின் நீண்டகால ஆட்சி ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. தாவீது, சாலொமோனின் ஆளுகைக்குப் பிறகு எசேக்கியாவின் ஆட்சியில்தான் மக்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அதிகமாகப் பெற்றிருந்தார்கள். எசேக்கியா உண்டாக்கின எழுப்புதல், சீர்திருத்தம்பற்றி 2நாளா 29-31 இல் பார்க்கிறோம்: 'அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.' 2நாளா 29:2. 'கர்த்தருடைய ஆலயத்தின் ஆராதனை திட்டம் பண்ணப்பட்டது.' 2நாளா 29:35. 'எருசலேமில் மகா சந்தோஷம் உண்டாயிருந்தது.' 2நாளா 30:26. அந்நியதேவர்களின் சிலைகளையும் பீடங்களையும் மேடைகளையும் உடைத்துப்போட்டார். 2 நாளா 31:1. மக்களில் எழுப்புதல் உண்டானது; தங்கள் நடத்தைகளைச் சீர்திருத்தினார்கள்; ஏராளமாக காணிக்கையும் தசமபாகமும் கொடுத்தார்கள். 2நாளா 31:4,5,12.

***எழுப்புதலும் சீர்திருத்தமும் உண்டாகி, மக்கள் தசமபாகம் கொடுத்த மற்றொரு சம்பவம் நெகேமியாவில் உள்ளது. நெகே 9:2,3. இருதயத்தில் எழுப்புதல் உண்டாவது என்றால் என்ன? நெகே 13ஐ வாசிக்கவும். தேவனுடைய ஆலயத்தில் நெகேமியா சீர்திருத்தம் உண்டாக்கியபிறகு, யூதாவின் மக்கள் அங்கு என்ன கொண்டுவந்தார்கள்? நெகே 13:4,12.***

'எழுப்புதலும் சீர்திருத்தமும் இரு வேறு விஷயங்கள். எழுப்புதல் என்பது ஆவிக்குரிய வாழ்க்கை புதுப்பிக்கப்படுவதையும், மனதின் ஆற்றல்களும் இருதயத்தின் ஆற்றல்களும் விழித்துக்கொள்வதையும், ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டுகிறது. சீர்திருத்தம் என்பது, மீண்டும் ஒழுங்குக்கு வருவதையும், எண்ணங்களையும் கொள்கைகளையும் நடத்தைகளையும் செயல்களையும் மாற்றுவதையும் குறிப்பிடுகிறது.' - *EGW, ChS, p 42.*

எழுப்புதலும் சீர்திருத்தமும் தசமபாகம்கொடுத்தலும் தாமாகவே ஒன்றன் பின் ஒன்றாக வந்துவிடும். தசமபாகம் கொடுக்காமல், எழுப்புதலும் சீர்திருத்தமும் உண்மையானவையாக இருக்காது; அது எழுப்புதலே அல்ல. கிறிஸ்தவர்கள் ஆண்டவருக்காக மும்முரமாகச் செயல்படவேண்டும்; ஆனால், பெரும்பாலும் பலர் ஓரமாக ஒதுங்கியே நிற்கிறார்கள். அர்ப்பணிப்பு இருந்தால்தான் எழுப்புதலும் சீர்திருத்தமும் உண்டாகும்; தசமபாகம் கொடுப்பது அந்த அர்ப்பணிப்பில் ஒரு பகுதியாகும். தேவன் நம்மிடம் கேட்பதை நாம் கொடுக்காதபட்சத்தில், நாம் கேட்பதை தேவன் தருவாரென எதிர்பார்க்க முடியாது.

எழுப்புதலும் சீர்திருத்தமும் சபைக்கு வெளியே அல்ல, உள்ளேதான் நடைபெறுகின்றன. சங் 85:6. நமக்கு எழுப்புதலும், 'ஆதியில் செய்த கிரியைகளுக்கே' திரும்பும் சீர்திருத்தமும் தேவையென தேவனிடம் கேட்கவேண்டும். சங் 80:19; வெளி 2:5. "நாம் எதைச் சேர்க்கிறோம்? தேவனுக்கு எவ்வளவு திரும்பக் கொடுக்கிறோம்?" என்பதில் ஒரு சீர்திருத்தம் நிச்சயம் உண்டாகவேண்டும்.

கொடுக்கிற செயல் அல்ல, கொடுக்கவேண்டுமென்கிற எண்ணத்தை வெளிப்படுத்துகிற மனதின் தீர்மானமும் உணர்வுகளும்தான் கவனிக்கத்தக்கவை. கொடுக்கும்போது, விசுவாசம் பெரிதாகும், ஆவிக்குரிய பார்வை கூராகும்; நேர்மை புதிதாகும்.

## மேலும் படிக்க:



வேதாகமத்தின் ஒவ்வோர் உடன்படிக்கையிலும் முதல் அடி எடுத்துவைத்தவர் தேவன்தாம்; பிறகு அந்த உடன்படிக்கைக்கு தம் மக்களை வழிநடத்தினார். எபி 8:10. உடன்படிக்கையின் வாக்குறுதிகள் அவருடைய கிருபை, அன்பு, ஆசை ஆகிய வற்றைப் பிரதிபலித்தன.

தேவ உடன்படிக்கையில் பல விஷயங்கள் உள்ளன: உடன்படிக்கையைத் துவங்கும் தேவன், உடன்படிக்கையால் நன்மைபெறுகிறவர், உடன்படிக்கையின் நிபந்தனைகள், அதை மீறுவதின் தண்டனைகள், உடன்படிக்கையின் விளைவுகள் தெரிகின்றன. தேவனுக்கும் அவருடைய உக்கிராணக்காரர்களுக்கும் இடையேயுள்ள விசேஷித்த தசமபாக உடன்படிக்கைபற்றி அங்கே பார்க்கிறோம். நாம் அந்த உடன்படிக்கைக்கு உடன்படும்போது, நுகர்வோர் லௌகீகக் கொள்கையை நாம் ஆதரிக்காததைக் காட்டுகிறோம்; மாற்றமடைந்த பாவ இருதயத்திலிருந்தும் ஏதாவது நன்மை பிறக்கக்கூடும் எனக் காட்டுகிறோம்.

'கஞ்சத்தனமும் சுயநலமுமான மனநிலையானது தேவனுக்குச் சொந்தமானதை அவருக்கே கொடுக்கவிடாமல் தடுக்கிறது. மனிதர்களோடு தேவன் ஒரு விசேஷித்த உடன்படிக்கையைச் செய்திருக்கிறார். அதாவது, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக நியமிக்கப்பட்ட தொகையை அவர்கள் தவறாமல் பிரித்தெடுத்து வைத்தால், தேவன் அவர்களைப் பரிபூரணமாக ஆசீர்வதிப்பார்; இடங்கொள்ளாமல் போகுமட்டும் அவருடைய ஈவுகளைப் பெறலாம். ஆனால், தேவனுக்குச் சொந்த மானதை மனிதர்கள் கொடுக்காவிட்டால், ' நீங்கள் சபிக்கப்பட்டவர்கள் ' என்று உறுதியாக ஆண்டவர் கூறுகிறார்.' - *EGW, CS, p 77.*

தேவனோடு உடன்படிக்கை உறவில் வாழ்வது பொறுப்புமிக்க ஒன்றாகும். உடன்படிக்கையின் வாக்குறுதிகள் நமக்குப் பிடித்தாலும், அதன் கட்டளைகளும் பொறுப்புகளும் பெரும்பாலும் பிடிப்பதில்லை. ஆனாலும், உடன்படிக்கை என்பது இரு சாரார் செய்கிற ஒப்பந்தம்; தசமபாகம் கொடுப்பது அந்த உடன்படிக்கைக்கு ஒத்துப்போவதின் ஓர் அம்சம்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. நம் விசுவாசத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாக எவ்வாறு தசமபாகம் இருக்கிறது?

2. தசமபாகம் கொடுக்குமளவிற்கு என்னிடம் வசதி இல்லை என்று சொல் லுகிற ஒருவருக்கு உங்கள் பதில் என்ன? இப்படி ஒரு சூழ்நிலையில் இருப்பவருக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம்? வெறும் வார்த்தைகளால் ஆறுதல்சொல்வதைக் காட்டிலும் வேறு எவ்வாறு உதவலாம்?

3. தசமபாகம் பரிசுத்தமானது என்கிற எண்ணத்தை எப்போதும் நினைவில் கொள்ள, என்ன செய்யலாமென புதன்கிழமைப் பாடத்தின் கடைசியில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. உங்கள் பதில்களை வகுப்பில் கலந்தாலோ சியுங்கள். தசமபாகம் பரிசுத்தமானது என்கிற எண்ணம் இருந்தால், அதைக் கொடுப்பதில் அது எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்கும்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*